## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
## பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, வீதி அபிவிருத்தி அதிகார சபை (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

---

*[1988, மார்ச்சு மாதம் 24 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1988 மார்ச்சு 25 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது**

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 தபாற் செலவு : சதம் 75

## 1988 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, வீதி அபிவிருத்தி அதிகாரசபை (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

[1988 மாச்சு 24 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 24/85
1825

**தற்போது பெருந்தெருக்கள் திணைக்களத்திற்கு உரித்தாக்கப்பட்டிருக்கும் தத்துவங்கள், வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் பிரயோகிக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; வீதி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்துக்கு விளைவாந்தன்மையினவான திருத்தங்களைச் செய்வதற்கும், அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான ஒரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது, 1988 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, வீதி அபிவிருத்தி அதிகாரசபை (சிறப்பேற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

சுருக்கப் பெயர்

### பாகம் I

பெருந்தெருக்கள் திணைக்களத்தின் அல்லது கட்டுவேலைகள் பணிப்பாளர் திணைக்களத்தின் தத்துவங்கள், பணிகள், கடமைகள் என்பன, 1981 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்கச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பிரயோகிக்கப்படுதலும், புரியப்படுதலும் நிறைவேற்றப்படுதலும்.

2. இச்சட்டமானது வலுவுக்கு வருவதிலிருந்தும் அதன் பின்னரும்—

(அ) இச்சட்டம் வலுவுக்கு வருவதற்கு முன்னர் பொது வழிகள் கட்டளைச் சட்டம் ஏற்புடைத்தாயிருந்த எல்லா வீதிகளும் பொது வழிகளும், (இதனகத்துப்பின்னர் "அதிகார சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1981 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்க, வீதி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தாதல் வேண்டும்;

(ஆ) பொது வழிகள் கட்டளைச் சட்டத்தினால் அல்லது வேறேதேனும் சட்டத்தினால் பெருந்தெருக்கள் திணைக்களத்திற்கு அல்லது கட்டுவேலைகள் பணிப்பாளர் திணைக்களத்திற்கு அளிக்கப்பட்ட அல்லது அவை மீது சுமத்தப்பட்ட அல்லது அவற்றுக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஒவ்வொரு தத்துவமும், கடமையும், பணியும் அதிகார சபையினால் பிரயோகிக்கப்படுதல், புரியப்படுதல் அல்லது நிறைவேற்றப்படுதல் வேண்டும்;

(இ) பொது வழிகள் கட்டளைச்சட்டத்தினால் அல்லது வேறேதேனும் சட்டத்தினால் இப்பாகத்துக்கான அட்டவணையின் I ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்ட அலுவலர் ஒருவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஒவ்வொரு தத்துவமும், கடமையும் பணியும் அவ்வட்டவணையின் II ஆம் நிரையின் நேரொத்த பதியில் குறித்துரைக்கப்பட்டவாறான, அதிகார சபையின் அத்தகைய அலுவலரால் பிரயோகிக்கப்படுதல், புரியப்படுதல் அல்லது நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

2—ஏ 101440—2,820 (02/88)

வீதியானது அதிகார சபையின் நிதியத்திலிருந்து பேணப்படின், அது அதிகாரசபையின் பொறுப்பில் உள்ளதாகக் கருதப்படுதல்.

3. பொது வழிகள் கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, வீதியொன்று அதிகார சபையின் நிதியத்திலிருந்து பேணப்பட்டு வந்தால் அது அதிகார சபையின் பொறுப்பிலுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், ஏதேனும் வீதியானது அதிகாரசபையினால் பேணப்படுகின்றதென்று பயன்படுவதான பொது முகாமையாளரின் கைப்பட்ட சான்றிதழொன்று, வீதியானது அவ்வாறு பேணப்படுகின்றதென்பதற்கு முதற்றோற்றச் சான்றுதலும் வேண்டும்.

அட்டவணை

| நிரை I | நிரை II |
|---|---|
| பணிப்பாளர் | பொது முகாமையாளர் |
| கண்காணிக்கும் பொறியியலாளர் | பிரதான பொறியியலாளர் |
| பிரதான பொறியியலாளர் | பிரதான பொறியியலாளர் |
| நிறைவேற்றுப் பொறியியலாளர் | நிறைவேற்றுப் பொறியியலாளர் |
| | செயற்படுத்தும் அலுவலர் |
| பணிப்பாளரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டவரும் பிரதான பொறியியலாளர் அல்லது நிறைவேற்றுப் பொறியியலாளர் அல்லாதவருமான பெருந்தெருக்கள் திணைக்களத்தின் வேறெவரேனும் அலுவலர். | |

பாகம் II

1981 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்கச் சட்டத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) வீதி அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவானது, அதன் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

"(3) ஐயுறவுகளைத் தவிர்ப்பதற்காக, வேறு ஏதேனும் சட்டத்தினால் அதிகார சபைக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன் மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை, அதிகார சபை பிரயோகிக்கலாம், புரியலாம் அத்துடன் நிறைவேற்றலாம் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவானது "இச்சட்டத்தின் கீழ் அதன் தத்துவங்களுள், கடமைகளுள் அல்லது பணிகளுள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இச்சட்டத்தினால் அல்லது வேறேதேனும் சட்டத்தினால் அதிகார சபைக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன் மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களுள், கடமைகளுள் அல்லது பணிகளுள்", என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.